1972 ஆகஸ்ட் 9]

கடன் வழங்க முன்வருவதில்லை. எனவே, விரைவிலே ஆய்வு நடத்திவிட்டால் ஒன்று கடன் வழங்கக்கூடாது என்று ஒரு குறித்த சட்டம் இயற்ற வாய்ப்பு இருக்கும் அல்லது அதுவரையிலாவது கடன்கள் வழங்க வழி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் உள்ள நிலைமைகளை ஆய்வு செய்வதற்காக ஒரு இலாகா அமைக்கப் பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகள் அந்தத் துறையின் மூலம் இப்போது செயலாற்றப்பட்டு வருகின்றன. இப்போது முழுவதுமாக ஏழு கோட்டங்கள் அமைக்கப்பட்டு, அந்தக் கோட்டங்கள் மூலமாக இந்த ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மதுரையிலுள்ள நில-நீர் கோட்டம் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடங்களிலே இந்த ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தலைமை வேளாண்மை இயக்குனர் மேற் பார்வையில் இப்படிப்பட்ட திட்டங்களுக்கான ஆய்வுகள் நடந்துகொண்டு இருக்கின்றன.

கிழத்திருத்தங்கல் புதிய கண்மாய்

*16. வினா—**திரு. கா. காளிமுத்து :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தூர் வட்டம், கிழத்திருத்தங்கல் புதிய கண்மாய்த் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்போது அது முடிவடையும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ரூ. 2,00,000.

(இ) 1973-ஆம் ஆண்டு செப்டம்பர் மாத அளவில் முடிக்கப்படும்.

மீனாட்சிபுரத்தில் புதிய கண்மாய்

* 17. வினா—**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) அருப்புக்கோட்டைத் தாலுக்காவில் மறவர் பெருங்குடி மீனாட்சி புரத்தில் புதிய கண்மாய் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) இத்திட்டம் பரிசீலிக்கப்பட்டு, தண்ணீர் போதுமானதாக இல்லையால் ஒத்திவைக்கப் பட்டுள்ளது.